IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
GUDIYATHAM, VELLORE DISTRICT.

C.C.NO.46/2020

DEPOSITION OF WITNESS P.W.4

| | | |
|---|---|---|
| NAME | : | TAMILSELVAN |
| FATHER'S NAME | : | NAGARAJ |
| VILLAGE | : | PUTTAVARIPALLI |
| OCCUPATION | : | DRIVER |
| AGE | : | 35 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 9th day of January 2026.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் மேற்படி முகவரியில் குடியிருந்து டிரைவராக வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகசர் மற்றும் கைப்பற்றுதல் மகசரில் என்னுடைய கையொப்பம் இல்லை. இவ்வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசுத்தரப்பில் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதின் பேரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:**

நான் போலிஸ் விசாரணையில் கடந்த 30.08.2018 ஆம் தேதி மாலை 06.00 மணிக்கு நானும், முரளி என்பவரும் சம்பவ இடத்தில் இருவரும் இருந்தபோது, பரதராமி காவல் நிலைய உதவி ஆய்வாளர் அன்றைய தினம் நடந்த சண்டை சம்பந்தமாக புலன் விசாரணை செய்ததாகவும், அங்கு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் தயார் செய்ததகாவும், அந்த பார்வை மகசரில் நாங்கள் இருவரும் சம்பவயிடத்தில் வைத்து கையெழுத்து செய்துவிட்டு, அன்றைய தினமே 06.30 மணியளவில் எதிரி பழனி என்பவரின் வீட்டிடம் சுமார் 3 அடி நீளம் கொண்ட மரக்கொம்பு ஒன்று கைப்பற்றியதாகவும், அதில் சாட்சி கையொப்பம் செய்ததாகவும் அதனை போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதவராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை இல்லை**

**Sd/-R.Saranya.,**
**Judicial Magistrate,**
**Gudiyatham.**